பிரேசில் நாட்டில் இருந்து

# மெட்ரோ ரெயில் சேவைக்கு இறுதி கட்டமாக 2 ரெயில்கள்

## 7-ந் தேதி சென்னை வருகை

சென்னை, மே.25–

பிரேசில் நாட்டில் இருந்து இறுதிகட்டமாக 2 ரெயில்கள் அடுத்த மாதம் (ஜூன்) 7–ந் தேதி சென்னை துறைமுகத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

### மெட்ரோ ரெயில் சேவை

பிரேசில் நாட்டில் உள்ள அல்ஸ்டாம் ரெயில் பெட்டி தயாரிக்கும் நிறுவனத்திடம் சென்னை மெட்ரோ ரெயில் சேவைக்காக ரூ.1471.3 கோடி செலவில் 42 ரெயில்களுக்கு தலா 4 பெட்டிகள் வீதம் 168 பெட்டிகள் தயாரிக்க ஒப்பந்தம் போடப்பட்டது. அதனடிப்படையில் 9 ரெயில்கள் பிரேசில் நாட்டிலும், 33 ரெயில்கள் ஆந்திரா மாநிலம் தடா ஸ்ரீ சிட்டியில் உள்ள அல்ஸ்டாம் ரெயில் நிறுவனத்திற்கான ரெயில் பெட்டி தொழிற்சாலையில் இருந்து தயாரித்து அனுப்பவும் திட்டமிடப்பட்டது.

இதன்படி பிரேசிலில் இருந்து கப்பல் மூலம் 7 ரெயில்கள் ஏற்கனவே சென்னைக்கு கொண்டு வரப்பட்டு சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதுதவிர ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியில் இருந்து 3 ரெயில்கள் கோயம்பேடு பணிமனைக்கு கொண்டுவரப்பட்டு சோதனை செய்யப்பட்டு வருகிறது.

### கப்பலில் வந்த ரெயில்கள்

இந்த 10 ரெயில்கள் டிராக் சோதனை, உள்சோதனை, மின்சார இணைப்புகளுக்கான சோதனைகள் நடந்து வருகிறது. இந்நிலையில் பிரேசில் நாட்டில் அல்ஸ்டாம் ரெயில் பெட்டி தொழிற்சாலையிலிருந்து இறுதியாக தயாரிக்கப்பட்ட 2 ரெயில்கள் "எம்.வி.பிபிசி ஓகியோ'' என்ற கப்பலில் ஏற்றப்பட்டு சென்னைக்கு வந்துக் கொண்டிருக்கிறது.

இந்த கப்பல் வரும் 7–ந் தேதி சென்னை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு சுங்கச் சோதனை உட்பட பல்வேறு சோதனைக்கு பின்னர் மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகளிடம் 2 ரெயில்களும் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில்களின் எண்ணிக்கை 12 ஆக உயர உள்ளது.

### 7-ந் தேதி வருகை

மெட்ரோ ரெயிலை கொண்டு வரும் மார்க்கன்ஸ் கப்பல் சேவை நிறுவனத்தின் சென்னை ஒருங்கிணைப்பாளர் வி.பிரேம்குமார் கூறியதாவது:–

மெட்ரோ ரெயில் சேவைக்காக பிரேசில் நாட்டில் இருந்து இதுவரை 7 ரெயில்கள் கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது 2 ரெயில்கள் "எம்.வி.பிபிசி ஓகியோ'' என்ற கப்பல் மூலம் சென்னை துறைமுகத்திற்கு அடுத்த மாதம் (ஜூன்) 7–ந் தேதி கொண்டுவரப்பட உள்ளது. உரிய சோதனைக்கு பின்னர் துறைமுக அதிகாரிகள், மெட்ரோ நிறுவன அதிகாரிகளிடம் ரெயில்களை ஒப்படைக்க உள்ளனர். பின்னர் அவர்கள் ராட்சத லாரிகள் மூலம் மெட்ரோ ரெயில்களை கோயம்பேடு பணிமனைக்கு கொண்டு செல்ல உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினர்.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறுகையில், "பிரேசில் நாட்டில் உள்ள அல்ஸ்டாம் நிறுவனத்தில் போடப்பட்ட ஒப்பந்தத்தின் படி 9 ரெயில்கள் தயாரித்து அனுப்ப வேண்டும். இதுவரை 7 ரெயில்கள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. மீதம் உள்ள 2 ரெயில்களும் தயாரிக்கப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டு சென்னை வந்து கொண்டிருக்கிறது. அடுத்த மாதம் (ஜூன்) 7–ந் தேதி சென்னை துறைமுகத்தில் இருந்து நாங்கள் முறையாக பெற்றுக்கொள்ள இருக்கிறோம்'' என்றார்.